# என் நாமத்திற்கு பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும். மல்கியா 4 : 2

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே,

இந்த ஆண்டில் உங்கள் வாழ்வில் ''நீதியின் சூரியன் உதிக்கும்'' என்ற வேத வசனத்தின்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆசீர்வதிக்கிறேன். இந்த வேத வார்த்தைகளை விசுவாசிக்கும் என் அன்பு சகோதர சகோதரிகளே!

இந்த மாதத்தில் அடிக்கடி கீழ்கண்டவாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள்:

**கர்த்தருடைய நாமத்திற்கு பயந்திருக்கிற**

என் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்.

என் குடும்பத்தின் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்.

என் உறவினர் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்.

என் நண்பர் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்.

என் ஊழியத்தின் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்.

என் வாழ்க்கையின் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்.

என் தொழிலின் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்.

எனக்கு என்னென்ன ஆசீர்வாதங்கள் தேவையோ அவைகளின் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்.

**உபா 28 : 58 கூறுகிறது:** ''உன் தேவனாகிய கர்த்தர்'' என்னும் மகிமையும், பயங்கரமுமான நாமத்திற்குப் பயப்படும்படிக்கு நீ இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற இந்த நியாயப் பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் நடக்க கவனமாய் இரு. ''உன் தேவனாகிய கர்த்தர்'' என்பதே மகிமையும் பயங்கரமுமான நாமம் ஆகும். இதற்கு நீங்களும், நானும் பயப்பட்டே ஆக வேண்டும். ''உன் தேவனாகிய கர்த்தர்'' என்னும் மகிமையும் பயங்கரமுமான நாமத்திற்குப் பயப்படுங்கள்.

**யாத்திராகமம் 23 : 27–ல் கர்த்தர் சொல்கிறார்:**

''எனக்குப் பயப்படும் பயத்தை உனக்கு முன் செல்லும்படி செய்வேன். நீ செல்லுமிடமெங்குமுள்ள ஜனங்கள் எல்லோரையும் கலங்கடித்து, உன் சத்துருக்கள் எல்லாரையும் முதுகு காட்டப்பண்ணுவேன்''. அல்லேலுயா!

ஆம் பிரியமானவர்ளே, இந்த ஆண்டில் புதிய ஆசீர்வாதமாக ''கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை நமக்கு முன் செல்லும்படி செய்வாராக'' ஆமென்! அப்படிச் செய்யும் பொழுது நம்முடைய சத்துருக்கள் எல்லாரையும் தேவன் முதுகு காட்டப்பண்ணுகிறார்.

**சங்.86 : 11–ல் தாவீதின் விண்ணப்பமானது:**

கர்த்தாவே நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும் என்பதாக. அல்லேலுயா!

**உன் தேவனாகிய கர்த்தர் எனும் நாமம் தரும் வாக்குத்தத்தங்கள்**

**ஆதி.28 : 13** : நான் உன் தேவனாகிய கர்த்தர், நீ படுத்திருக்கும் பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்.

**யாத்திராகமம் 20 : 12** : உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

**உபாகமம் 10 : 14** : இதோ வானங்களும், வானாதி வானங்களும், பூமியும் அதிலுள்ள யாவும், உன் தேவனாகிய கர்த்தருடையவைகள்.

**யாத்திராகமம் 23 : 25,26** : உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக் கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும், உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை; உன் ஆயுசுநாட்களை பூரணப்படுத்துவேன்.

**1 நாளாகமம் 28 : 20 :**

தேவனாகிய கர்த்தர் உன்னும் தேவன் உன்னோடு இருப்பார். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கடுத்த சகல கிரியைகளையும் நீ முடித்துத் தீருமட்டும் அவர் உன்னைவிட்டு விலகவுமாட்டார். உன்னைக் கைவிடவும் மாட்டார்.

**உன் தேவனாகிய கர்த்தர் தரும் கட்டளைகள்**

**லேவியராகமம் 11 : 44** நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால் உங்களை பரிசுத்தமாக்கிக் கொண்டு பரிசுத்தராயிருப்பீர்களாக.

**யாத்திராகமம் 20 : 10** : ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்.

**யாத்திராகமம் 20 : 7**

உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக. கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

**யாத்திராகமம் 20 : 5**

உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து உன்னைப் பகைக்கிறவர்களைக் குறித்து (விக்கிரக ஆராதனைக்காரர்கள்) பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்.

**உபாகமம் 6 : 16**

உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பீர்களாக.

**உபாகமம் 4 : 24**

உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி. அவர் எரிச்சலுள்ள தேவன்.

**உன் தேவனாகிய கர்த்தர் எப்படிப்பட்டவர்?**

**உபாகமம் 10 : 17**

உங்கள் தேவனாகிய கர்த்தர், தேவாதி தேவனும் கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார். அவர் பட்சபாதம் பண்ணுகிறவரும் அல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல.

**செப்பனியா 3 : 17**

உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார். அவர் வல்லமையுள்ளவர்; அவர் இரட்சிப்பார், அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பின் நிமித்தம் அமர்ந்திருப்பார். அவர் உன் பேரில் கெம்பீரமாய்க் களிகூறுவார்.

**சகரியா14 : 5**

உன் தேவனாகிய கர்த்தர் வருவார். தேவரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வளருவார்.

**வெளிப்படுத்தல் 22 : 5** அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்.

ஆம் பிரியமானவர்களே, இந்த வருடம் ''உன் தேவனாகிய கர்த்தர்'' என்ற மகிமையும் பயங்கரமுமான நாமம் வரும் வேதப்பகுதிகளைப் புரட்டி படிப்போம், விசுவாசிப்போம், ஜெயிப்போம், பயப்படுவோம், ஸ்தோத்தரிப்போம். அப்பொழுது கர்த்தர் சொல்லுவார்.

**என் நாமத்திற்கு பயந்திருக்கிற உங்கள் மேல்**
**நீதியின் சூரியன் உதிக்கும்**